<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

<u>அசல் வழக்கு எண்.62/2017</u>

PW1 – திரு.ராஜேந்திரன் நாள். 06.02.2026

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 உயில் ஆவணமானது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரரின் பெயரில் ராஜேந்திரன் என்றால் சரிதான். தங்கச்சாமி தேவர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கும் அவரது சகோதரர் ராஜேந்திரன் என்ற அருளப்பனுக்கும் 28.07.1993 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தங்கச்சாமி தேவர் 2005 ம் ஆண்டு இறந்து போனார்.

2. தங்கச்சாமி தேவரின் இறப்பிற்கு பிறகு தாவா சொத்துக்களை அடைந்த 1ம் பிரதிவாதி 3,6,7,13 லக்கச் சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம். 428/2 ல் கண்டுள்ள சொத்தை அருளானந்தும், 428/5 சி ல் கண்டுள்ள சொத்தை ஜெகந்நாதனும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி அருளாந்தும், ஜெகந்நாதனும் தங்கச்சாமி தேவரிடம் இருந்து நேரடியாக கிரைய் பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.432/3 ல் கண்டுள்ள சொத்தை காளிமுத்தனும் சர்வே எண்.426/ல் கண்டுள்ள சொத்தை செங்கோலும் அவரது மனைவி அற்புதமேரியும் தங்கச்சாமி தேவரிடம் இதுருந்து கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிராதில் சொல்லி உள்ள 1,9,10,11,12 லக்கச்

சொத்துக்கள் எனது அனுபவத்தில் கிடையாது என்றும் பிராால் சொல்லி உள்ள சொத்திற்கும் எனக்கும் எந்த வித அனுபவமும் பாத்தியமும் கிடையாது என்றும், 1, 3 ம் பிரதிவாதிகள் மற்றும் சபரிதுரைராஜ், இருதயராஜ், ஜெகந்நாதன், அற்புதமேரி, செங்கோல் லூர்து சாமி, அருளானந்தம், ஜேம்ஸ் பீட்டர், அருளாந்து, லெட்சுமி, காளிமுத்தன் ஆகியோர் இராமநாதபுரம் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலரிடம் மனு கொடுத்து அங்கு விசாரணை நடந்தது என்றும் அங்கு தவறுதலாக என் பெயரில் பட்டா ஏற்பட்டு விட்டது என்றும் அதனை சரி செய்து கொடுத்து விடுகிறேன் என்று ஒப்புக் கொண்டு எழுதி கொடுத்து வந்தேன் என்றால் சரியல்ல, புகார் மற்றும் விசாரணை பற்றி எதுவும் தெரியாது.

3. மேற்படி பட்டாவை நான் ரத்து செய்ய நட வடிக்கை எடுக்காததால் மேற்படி நபர்கள் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியாடம் நா.கா.5/4183/2016 என மனு கொடுத்தனர் என்றால் சரிதான். பிராதில் காவல்துறை நடவடிக்கை கொடுத்ததும், வருவாய் துறை நடவடிக்கை குறித்தும் தெரிவிக்கவில்லை என்றால் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லாததால் தெரிவிக்கவில்லை. தாவா சொத்து தொடர்பாக வருவாய் கோட்டாட்சியரிடம் விசாரணை நிலுவையில் இருக்கும் போது தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் விசாணையில் எனது பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் விசாரணையில் வழக்கறிஞர் வைத்து தான் விசாரணையில் பங்கேற்றேன். மேற்படி உத்தவரானது நான் ஒப்புக் கொண்டால் வழக்கு எனக்கு பாதகமாக அமைந்து விடும் என்பதால் நான் மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. இந்த வழக்கின் அவசிய கட்சி காரர்களான மேற்படி சபரிதுரைாஜ், இருதயராஜ், ஜெகந்நாதன், அற்புதமேரி, செங்கோல் லூர்து சாமி, அருளானந்தம், ஜேம்ஸ் பீட்டர், அருளாந்து, லெட்சுமி, காளிமுத்தன் ஆகியோர்களை வழககில் சேர்க்காததல் வழக்கானது தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்களை நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது, எனக்கு எந்தவித பாத்தியமும் கிடையாது என்றும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வாயிலாக வழக்குச் சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் ஏற்படாது என்றும், வழக்குச் சொத்தை

குறைவாக மதிப்பிட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் வியாஜிய மூலம் கற்பனையானது என்றும் நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடியது இல்லை என்றும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை